[1968 ஆகஸ்ட் 19

THIRU K. VINAYAKAM : There is direction. I want to put one more supplementary question.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 23-ஆம் எண்ணுள்ள மூலக்கேள்விக்கு கடைசித் துணைக் கேள்வியை திரு. விளுயகம் அவர்கள் கேட்கலாம்.

திரு. கே. விளுயகம் : தாங்கள் கொஞ்சம் 'லிபரலாக இருக்க வேண்டும். You must be large-hearted and liberal.

திரு. செஞ்சி வெ. முனுசாமி : பாயிண்ட் ஆப் ஆர்டர், சார். துணைக் கேள்வி அனுமதிப்பதா, இல்லையா என்று முடிவு செய்ய வேண்டியது பேரவைத் தலைவருக்குள்ள உரிமையாகும். துணைக் கேள்வியை அனுமதிக்க வேண்டும் என்று வற்புறுத்துவது ஒழுங்கு தாளு என்று அறிய விரும்புகிறேன்.

திரு. கே. விளுயகம் : எப்படிக் கேள்வி கேட்க வேண்டும் என்பதும், எப்படிச் சமாளிக்க வேண்டும் என்பதும் எங்களுக்குத் தெரியும். வேண்டுகோள்தானே விடுத்தோம்?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கனம் உறுப்பினர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துப் பேசிக் கொள்ளக் கூடாது. எதையும் என்னிடம் சொல்ல வேண்டும்.

திரு. கே. விளுயகம் : திருச்சியில் நடந்த ஆபாச நடனம் என்று சொல்லப்படுகிறதே அது சம்பந்தப்பட்ட குற்றவாளிகள்—அவர்கள் அரெஸ்ட் செய்யப்படுவதற்கு முன்பு—எத்தனை முறை அந்த நடனத்தை நடத்திக் காட்டினுர்கள்? பிறகு எத்தனை முறை நடந்த பிறகு, அது ஆபாசம் என்று போலீசார் கண்டு பிடித்து நடவடிக்கை எடுத்திருந்தார்கள்? எத்தனை பேர்கள் அந்த நடனத்தைப் பார்த்தார்கள்? இதுபற்றி ஏதாவது விவரம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை : எத்தனை பேர் பார்த்தார்கள் என்பது திருச்சியிலே நடந்த நடனத்தின்போது உடன் இருந்து பார்த்தவர்களுக்குத்தான் தெரியும். நான் அப்படிப்பட்டவர்களில் ஒருவன் அல்ல. 'ஆபாச நடனம்' என்ற புகார் போலீசாருக்கு வந்தவுடன், அவர்கள் தகவல் அறிந்து, அதைத் தடுத்து இருக்கிருர்கள்.

முன்ளுள் அமைச்சர்கள் உபயோகித்த கார்கள்

* 24 விளு.—திரு. வை. சுவாமிநாதன் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விளுவிற்கு விடையளிப்பாரா—

முன்ளுள் அமைச்சர்கள் உபயோகித்த பெரிய கார்கள் இப்பொழுது எதற்காகப் பயன்படுகின்றன?

1968 ஆகஸ்ட் 19]

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : முன்னாள் அமைச்சர் களால் பயனபடுத்தப்பட்டு வந்த பெரிய கார்களில் நல்ல நிலைமையில் உள்ளவை, தகைசான்றவர்கள் தமிழ்நாட்டிற்கு வருகை தருகையில் பயன்படுத்தப்படுகின்றன.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, இத்தகைய பெரிய கார்கள் எத்தனை இருக்கின்றன என்ற விவரம் கொடுக்க முடியுமா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : பெரிய கார்கள் ஆறு இருக்கின்றன. அவைகளாவன—இரண்டு செவர்லே; ஒன்று செவர்லே இம்பாலா ; ஒன்று டாட்ஜ்; ஒன்று ஓபல் காப்டான ஒன்று ஃபோர்டு ஸெபைர். இவைகளில் சில பழுதுபட்டிருக் கின்றன. சில பழுதுபட்டிருப்பது மட்டுமல்லாமல், சரிபடுத்தவே முடியாது என்ற நிலையில், விற்று விடலாமா என்ற நிலையிலும் இருக்கின்றன. மற்றவை இப்படிப்பட்ட உபயோகத்திற்கு இருக்கின்றன.

திரு. வை. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, சமீபத்திலே பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் விபத்துக்குள்ளான தற்குக் காரணம், சிறிய காரில் பயணம் செய்ததனால் இருக்கக் கூடும். பெரிய கார்களை உபயோகித்து வந்தால், அத்தகைய விபத்துக்கள் தடுக்கப்படலாம். பயண நேரமும் மிச்சப்படும். மெயின்டினென்ஸ் செலவும் குறையும். ஆகவே, நெடுந்தூரம் பயணம் செய்யும்போது, பெரிய கார்களை அமைச்சர்கள் உபயோகப்படுத்த உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : பெரிய கார்களில் போனால் விபத்துக் குறைவாக இருக்கும் என்ற ஒரு கருத்து இருக்கத்தான் செய்கிறது. ஆனால், பெரிய கார்களில் போயும் விபத்து ஏற்பட்ட சம்பவங்களும் இருக்கின்றன.

THIRU K. S. KOTHANDARAMIAH : May I know the number of previous Ministers who used big cars?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : ஆறு பேர்கள் பெரிய கார்கள் வைத்திருந்தார்கள். ஒருவர் இருவர் சின்னக் கார்கள் அம்பாஸடர் கார்கள் வைத்துக் கொண்டிருந்தார்கள்.

திரு. டி. மார்டின் : தலைவர் அவர்களே, கனம் முதலமைச்சர் அவர்கள் கூறுகின்றபோது, "தகைசான்றவர்கள் தமிழ்நாட்டுக்கு வருகை தருகையில் அந்தப் பெரிய கார்கள் பயன்படுத்தப்படு கின்றன" என்று கூறினார்கள். தகைசான்றவர்கள் அடிக்கடி இங்கு வருவதில்லை. ஒருசில நேரங்களில்தான் வருகிறார்கள். மற்ற நேரங்களில் இந்தக் கார்களெல்லாம் 'ஐடில்' ஆக ஷெட்டில் நிற்பதைத் தவிர்த்து, அவற்றை வெளிநாடுகளிலிருந்து சென்னைக்கு வருகின்றவர்கள் உபயோகிக்கக்கூடிய 'டாக்சிகளாக விடுவதற்கான செயல்முறையை இந்த அரசு மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : அப்படிப்பட்ட எண்ணம் அரசுக்கு இல்லை.

திரு. க. இராமமூர்த்தி : தலைவர் அவர்களே, இந்த அரசாங்கத்திற்குச் சொந்தமான பெரிய கார்களில் ஒன்று, சில மாதங்களுக்கு முன்பு உதகையில் விபத்துக்கு உள்ளாக்கியது. அது எந்தச் சூழ்நிலையில், யார் அதில் சென்றபோது விபத்து ஏற்பட்டது என்ற விவரத்தைச் சபைக்கு அறிவிக்கலாமா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : அதற்கான விவரம் என்னிடம் இல்லை. ஆனால், 15—5—1967 அன்று செவர்லேட் இம்பாலா என்கிற கார் உதகையில் விபத்துக்குள்ளாகி, அது மிகவும் பழுதான நிலையில் இன்றையதினம் கோவையில் இருக்கின்றது. அதைப் பொது ஏலத்திற்குவிட வேண்டும் என்றும் அரசு எண்ணிக் கொண்டிருக்கிறது.

Small Industries Corporation

* 25 Q.—THIRU A. M. RAJA : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state whether the Government proposes to appoint a full-time Managing Director for the Madras State Small Scale Industries Corporation Limited?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தமிழக சிறு தொழில் கார்ப்பரேஷனுக்கு 4-2-1968 முதல் ஒரு முழு நேர நிர்வாக நெறியாளர் நியமிக்கப்பட்டுள்ளார்.

DR. H. V. HANDE : Sir, will the Hon. Minister be pleased to state the number of units that are under this particular Corporation and also what is the substantial progress made by his Corporation in the matter of developing industries. Also, will he be pleased to place before this House details about this Corporation?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் அதிகத் தொடர்பு இல்லை. 1—12—1965-ல் 65 தொழில் யூனிட்டுகள் இந்தக் கார்ப்பொ ரேஷனின் கீழ்க்கொண்டு வரப்பட்டது. இந்தக் கார்ப்பொ செய்யப்பட்டிருக்கிறது. அதிகமான இடங்களைக் கொடுத்தால் நலமாக இருக்காதா என்பதை அரசாங்கம் யோசிக்குமா?

செஞ்சி நகரத்திற்கு ஆசிரியர் பயிற்சிப் பள்ளி

* 26 வினா.—**திரு. ரா. ரா. முனுசாமி :** மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) செஞ்சி நகரத்தில் ஒரு ஆசிரியர் பயிற்சிப் பள்ளி அமைக்கும் திட்டம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம் எனில், எப்பொழுது முதல் அமல் படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இந்தக் கேள்விக்கு இடமில்லை.